செ.வெ.எண். 33 நாள்: 14.11.2021

**வடக்கிழக்கு பருவகாலங்களில் ஏற்படும் டெங்கு காய்ச்சல் மற்றும் பிற தொற்று நோய்கள் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு சிறப்பு நடமாடும் மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப. அவர்கள் இன்று (14.11.2021) கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வடக்கிழக்கு பருவகாலங்களில் ஏற்படும் டெங்கு காய்ச்சல் மற்றும் பிற தொற்று நோய்கள் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு சிறப்பு நடமாடும் மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப. அவர்கள் இன்று (14.11.2021) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

**மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:**

வடக்கிழக்கு பருவகாலங்களில் ஏற்படும் டெங்கு காய்ச்சல் மற்றும் பிற தொற்று நோய்கள் ஏற்படுவதை தடுகக்கும் பொருட்டு தமிழக அரசரால் மேற்கொள்ளப்பட்டு வரும் தீவிர நோய் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டுதலின் படியும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நமது மாவட்டத்தில், பருவமழை தொடங்கும் முன்னரே காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை தீவரப்படுத்தவும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், உள்ளாட்சித்துறை மற்றும் பொது சுகாதாரத்துறை மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காய்ச்சல் தடுப்பு பணிக்கு மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு ஒவ்வொரு வட்டாரத்திலும் 20பேர் வீதம் 200 களப்பணியாளர்கள், ஒவ்வொரு பேருராட்சிகளிலும், 10 பேர் வீதம் 60 களப்பணியாளர்களையும், நகராட்சிகளில் 55 களப்பணியாளர்களும், ஓசூர் மாநகராட்சிகளில் 175 களப்பணியாளர்களும் ஆக மொத்தம் 490 பணியாளர்களைக் கொண்டு கொசுப்புழு ஒழிப்பு பணியான அபேட் மருந்து தெளிதல் மற்றும் கொசுப் புகை மருந்து அடிக்கும் பணிகள் போர்க்கால அடிப்படையில் மாவட்டம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், களப்பணியாளர்களை கொண்டு வீட்டின் உட்புறம் வெளிபுறமும் புகை மருந்து அடிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கொசு புழுக்களை ஒழிப்பதற்கு அபேட் மருந்து தண்ணீரில் ஊற்றப்படுகிறது. நிலவேம்பு குடிநீர் காய்ச்சல் கண்ட பகுதிகளில் வழங்கப்படுகிறது. துண்டு பிரசுரங்கள் வழங்கி காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

· பொது மக்கள் தங்கள் வீட்டில் பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் டப்பாக்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருள்களை முற்றிலும் தவிர்ப்புமாறு கேட்டுககொள்ளப்படுகிறார்கள். உடைந்த பிளாஸ்டிக் பொருட்களில் மழை நீர் தேங்கி அதன் மூலம் கொசு உற்பத்தியாகும். இதனால் டெங்கு மற்றும் சிக்குன்குனியா போன்ற நோய்கள் பரவுக்கூடும்.

எனவே பொதுமக்கள் தங்களது வீட்டில் பிளாஸ்டிக் பொருள்களை முற்றிலும் ஒழித்து சுற்றுப்புரத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் தங்கள் வீட்டில் உள்ள தண்ணீர் தொட்டிகளை பிளீச்சிங் பவுடரை கொண்டு சுத்தமாக கழுவி உலர்த்திய பிறகு தண்ணீர் பிடிக்க வேண்டும் எனவும், பிடித்த தண்ணீரை காற்று புகா வண்ணம் துணிகளைக்கொண்டு கட்டி மூடி வைக்க வேண்டும் எனவும், டயர்கள், பிளாஸ்டிக் பொருட்கள், தேங்காய் சிரட்டை, உரல், ஆட்டுக்கல் போன்ற வீட்டில் உபயோகப்படாத பொருட்களில் மழை நீர் தேங்காமல் அகற்றிட வேண்டும் எனவும், சுகாதார பணியாளர்கள் வரும்பொழுது வீட்டின் உடபுறம் புகை மருந்து அடிக்க அனுமதி அளித்து ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் எனவே, வீடு வீடாக செல்லும் பொது சுகாதாரத்துறை களப்பணியாளர்களுக்கு பொது மக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் காய்ச்சல் கண்ட நபர்கள் எவருரேனும் அறிகுறியுடன் இருப்பின் உடனடியாக அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தையோ அல்லது அரசு மருத்துவமனையையோ அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

பொது மக்களுக்கு பருவமழையின் பொழுது ஏற்படும் வயிற்றுப்போக்கு, டெங்கு, சிக்குன்குனியா, மலேரியா, லெப்டோபைரோஸிஸ் போன்ற நோய் தொற்றுகள் மற்றும் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் கொசுக்கள்ள பராவமல் இருக்க முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை பணிகளை மேற்கொள்ள அனைத்த வட்டாரங்களிலும் 30 சிறப்பு நடமாடும் வாகனங்கள் மற்றும் புகை மருந்து அடிக்கும் 55 Hand Fog , இயந்திரங்கள், 30 Pulse Fog இயந்திரங்கள் மற்றும் 8 புகை மருந்து அடிக்கும் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ,ப. அவர்கள் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் துணை இயக்குநர் (சுகாதார பணிகள் ) மரு.வி.கோவிந்தன் மற்றும் மருத்துவர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.**